©
தமிழ்நாடு அரசு
2024

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[விலை: ரூ. 0.80 காசு.

தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண். 23] சென்னை, புதன்கிழமை, ஜூன் 5, 2024
வைகாசி 23, குரோதி, திருவள்ளுவர் ஆண்டு–2055

பகுதி VI—பிரிவு 1 இன் இணைப்பு

துறைத் தலைவர்களுடைய அறிவிப்புகள்

1975-ம் வருட தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம் பிரிவு 44(1)ன் கீழ் அறிவிக்கை

(ந.க. எண். 715/இ1/2022)

சங்கப்பதிவுச் சட்டத்தின் கீழ் 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் பதிவு செய்யப்பட்ட சங்கங்களானது தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச்சட்டம் பிரிவு 16(3)ன்படி கோர்வை செய்ய வேண்டிய அறிக்கைகள் கடந்த 3 (மூன்று) ஆண்டுகளாக சங்கம் புதுப்பித்தலுக்காக கோர்வைக்கு தாக்கல் செய்யப்படாமல் உள்ளதால் ந.க. எண். 715/இ1/2022, நாள். 22.02.2024 ன்படி 1975 ம் ஆண்டு தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம் பிரிவு 44(1)ன் கீழ் அறிவிப்பு அனுப்பப்பட்டது. சங்கங்களிடமிருந்து பதிலேதும் பெறப்படாத நிலையில் *தமிழ்நாடு அரசிதழில்* சங்கங்கள் பதிவுச் சட்டம் பிரிவு 44(3)ன் கீழ் அறிவிப்பு வெளியிடவும், இவ்வறிவிப்பு வெளியிட்ட மூன்று மாதங்களுக்குள் சங்கம் செயல்பாடு சம்மந்தமாகவும், தக்க விளக்கம் அளிக்கப்படவில்லையெனில் கீழ்க்கண்ட சங்கப்பெயர்கள் சங்கப்பதிவேட்டிலிருந்து நீக்கம் செய்யப்படும். என அறிவிக்கப்படுகிறது.

வ. எண்.	*சங்கங்களின் பெயர்*	*சங்கங்களின் பதிவு எண்*	*சங்கங்களின் முகவரி*
(1)	*(2)*	*(3)*	*(4)*
1	Bluebells Apartments Safety and Welfare Association (BBAA)	128/2018	No. 43, Janani Bule bells Near SRR Engineering College, அன்னை தெரசா தெரு, படூர் கிராமம், திருப்போரூர் தாலுக்கா, செங்கற்பட்டு மாவட்டம்.
2	படூர் ஜனனி ப்ளுபெல்ஸ் அப்பார்ட் மெண்ட்ஸ் ஓனர்ஸ் அசோசியேசன்	41/2019	படூர் ஜனனி ப்ளுபெல்ஸ் அப்பார்ட் மெண்ட்ஸ் ஓனர்ஸ் அசோசியேசன், தரைதளம், Aசௌத் புளுபெல்ஸ் அபார்ட்மெண்ட், அன்னை தெரசா தெரு, படூர் கிராமம், திருப்போரூர் தாலுக்கா, செங்கற்பட்டு மாவட்டம்.

செங்கல்பட்டு,
2024 ஏப்ரல் 10.

கோ. அறிவழகன்,
மாவட்டப் பதிவாளர், (நிர்வாகம்.)

1975-ம் வருட தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம் பிரிவு 44(2)-இன் கீழ் அறிவிக்கை

(ந.க. எண். 8010/இ1/2023)

1975–ஆம் வருட தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச்சட்டம் (தமிழ்நாடு சட்டம் 27/1975) பிரிவு 44(2)-இன் கீழ் அளிக்கப்படும் அறிவிப்பானது, பிரிவு 44(1) -இன் கீழ் சங்கங்கள் செயல்படுகிறதா என கீழ்க்கண்ட சங்கத்திற்கு அனுப்பிய இவ்வலுவலக கடித எண்.8010/இ1/2023, நாள்.24.11.2023–க்கு எவ்விதப் பதிலும் பெறப்படவில்லை. அறிவிப்பு கடிதம் திரும்ப வரப்பெற்றுள்ளது. எனவே இந்த அறிவிப்பு *"தமிழ்நாடு அரசிதழில்"* பிரசுரமாகும் நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் தக்க விளக்கம் சங்கத்திடமிருந்து பெறப்படவில்லையாயின், கீழ்க்கண்ட சங்கத்தின் பெயர் சங்கப்பதிவேட்டிலிருந்து நீக்கப்படும் என அறிவிக்கப்படுகிறது.

Verified RedEstate ™

வரிசை எண்.	*சங்கத்தின் பதிவு எண் மற்றும் வருடம்*	*பதிவு அஞ்சல் திரும்பப் பெறப்பட்ட நாள்*	*சங்கத்தின் பெயர் மற்றும் முகவரி*
(1)	*(2)*	*(3)*	*(4)*
1	98/1991	01.12.2023	உசிலம்பட்டி நட்டாத்தி இந்து நாடார் உறவின்முறை பேரவை, 6–12–15, ஜவுளிகடை பஜார், உசிலம்பட்டி, மதுரை மாவட்டம்.

மதுரை (தெற்கு),
2023 டிசம்பர் 5.

இரா. முத்துக்குமார்,
மாவட்டப்பதிவாளர் மற்றும்
சங்கங்களின் பதிவாளர்.

1975-ம் ஆண்டு தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம் பிரிவு 44(4)-ன் கீழ் செயல்படாத சங்கங்களாக கருதி சங்கப்பதிவேட்டிலிருந்து நீக்கம் செய்தல் பற்றிய அறிவிக்கை

(கடித எண். 2251/இ1/2024)

கேளம்பாக்கம் அனைத்து வியாபாரிகள் சங்கம் பதிவு எண் 88/2008 சங்கமானது தமிழ்நாடு சங்கம் பதிவு சட்டப்பிரிவு 16(3)ன் படி கோர்வை செய்ய வேண்டிய அறிக்கைகளை கடந்த மூன்றாண்டுகளுக்கு மேல் கோர்வை செய்யாமல் இருப்பதைத் தொடர்ந்து 1975ம் ஆண்டு தமிழ்நாடு சங்கம் பதிவுச் சட்டப்பிரிவு 44(4)–ன்படி செயல்படாத சங்கமாக கருத வேண்டியுள்ளதாக *தமிழ்நாடு அரசிதழில்* இவ்வறிக்கை வெளியிடப்பட்டது. 3 மாதங்களுக்குள் மேற்காணும் அறிக்கைகளைக் கோர்வை செய்யாமைக்கு தகுந்த காரணம் அளிக்கப்படவில்லையெனில் சங்கப்பதிவேட்டிலிருந்து பதிவு நீக்கம் செய்யப்படும் என அறிவிப்பு பிரசுரமானது. அதனைத் தொடர்ந்து மூன்று மாதங்களுக்கு மேலாகியும் இது குறித்து முகாந்திரம் வரப்பெறாமையால் மேற்படி சங்கம் செயல்படவில்லை என தீர்மானித்து சங்கப்பதிவேட்டிலிருந்து நீக்கம் செய்யப்படுகிறது.

சங்கப்பதிவுச்சட்டம் பிரிவு 44(4)–ன் கீழ் செயல்படாத சங்கம் என முடிவு செய்யப்பட்டு *தமிழ்நாடு அரசிதழில்* வெளியிடப்பட்ட நாளிலிருந்து ஓராண்டுக்குள் பதிவுத்துறைத்தலைவர் அவர்களிடம் மேல்முறையீடு செய்யலாம். பதிவுத்துறை தலைவரின் ஆணை சங்கத்துக்கு ஆதரவாக இல்லையெனில் நீதிமன்றத்தில் உத்தரவு தேதியிலிருந்து இரண்டு மாதத்திற்குள் மேல்முறையீடு செய்யலாம்.

மாவட்டப்பதிவகம்,
செங்கல்பட்டு,
2024 ஏப்ரல் 18.

கோ. அறிவழகன்,
மாவட்டப் பதிவாளர், (நிர்வாகம்.)

1983-ம் வருடத்திய தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் சட்டப்பிரிவு 137(2)ன் கீழ் கலைத்தல் ஆணை பற்றிய அறிவிக்கை

(ந.க. எண். 4212/2022/ஆ2)

காஞ்சிபுரம் மாவட்டம், ஜி.கே. 204 பச்சையப்பன் மேல்நிலைப்பள்ளி பணியாளர்கள் கூட்டுறவு சிக்கன மற்றும் கடன் சங்கம் கடந்த 2 ஆண்டுகளாக செயல்படாமலும், எந்த நோக்கத்திற்காக சங்கம் துவக்கப்பட்டதோ அந்த நோக்கம் செயல்படுவது அற்றுபோய் உள்ளதாலும், 1983–ம் வருடத்திய தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் சட்டப்பிரிவு 137(2)ன் கீழ் இச்சங்கம் துணைப்பதிவாளர், காஞ்சிபுரம் சரகம் கலைப்பு ஆணை ந.க.4212/2022/ஆ2, நாள். 16.08.2023–ன்படி கலைத்து உத்தரவிடப்பட்டுள்ளது.

1983–ம் வருடத்திய தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் சட்டப்பிரிவு 138(1)ன்படி கூட்டுறவு சார் பதிவாளர் (அலுவலகம்) கலைப்பு அலுவலராக நியமித்து ஆணையிடப்பட்டுள்ளது.

காஞ்சிபுரம்,
2023 ஆகஸ்ட் 16.

தே. சித்ரா,
துணைப்பதிவாளர்,
காஞ்சிபுரம் சரகம்.

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை ஆணையரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.